NUS National University of Singapore

**Source:** *Tamil Murasu*, p2
**Date:** 14 November 2018

# மகாதீருக்கு கௌரவ டாக்டர் பட்டம்




கௌரவப் பட்டமளிப்பு விழாவில், மலேசியப் பிரதமர் டாக்டர் மகாதீர் முகம்மதுவும் டாக்டர் சித்தி ஹஸ்மா ஹாஜி முகமது அலியும் (வலது கோடி) சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகத்தில் தங்களுடன் படித்த டாக்டர் சுந்தரி லில்லி சர்மாவுடன் (இடது) உரையாடுகின்றனர். டாக்டர் சுந்தரி, மகாதீரின் வகுப்பில் படித்தவர். டாக்டர் சித்தியுடன் ஒரே மாணவர் விடுதியில் தங்கியிருந்தவர்.
**படம்: ஸ்ட்ரெய்ட்ஸ் டைம்ஸ்**

மருத்துவம் பயின்ற 65 ஆண்டுகள் கழித்து மலேசியப் பிரதமர் மகாதீர் முகம்மதுவுக்கு அவர் படித்த சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகம் அவருக்கு கௌரவ டாக்டர் பட்டம் வழங்கி பெருமைப்படுத்தியது.

சிங்கப்பூரில் 1947 முதல் 1953 வரை செயல்பட்ட கிங் எட்வர்ட் மருத்துவக் கல்லூரியில் மகாதீர் மருத்துவம் படித்தார். இது தற்போது தேசிய பல்கலைக்கழகத்தின் பகுதியாக உள்ளது.

அங்கு படிக்கும்போதுதான் தமது துணைவியார் சித்தி ஹஸ்மா 92, அவர் காதலித்து மணம் புரிந்தார்.

பொது சுகாதாரத் துறையில் ஆற்றிய பங்கிற்காகவும் மலேசியாவில் பெண் மருத்துவர்களுக்கு முன்னுதாரணமாகத் திகழ்வதற்காகவும் டாக்டர் சித்தி ஹஸ்மாவுக்கு பழைய மாணவர் சங்கம் நேற்று தலைசிறந்த சேவை விருது அளித்து சிறப்பித்தது.

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.